**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை – பணியமைப்பு – மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களில் நீண்ட காலமாக காலியாக இருந்த 37 தற்காலிக பணியிடங்களுக்கு புத்தாக்கம் (Revival) மற்றும் பின்னேற்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 33** **நாள்: 31.08.2018**
**விளம்பி – ஆவணி, 15**
**திருவள்ளுவர் ஆண்டு, 2049**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண் 6, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–1)த் துறை, நாள் 24.03.2017.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 332/நிர்.1/2013, நாள் 27.07.2018.

----------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களில் உள்ள 294 தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2016 முதல் 31.12.2017 வரையிலான காலங்களுக்கு பணித்தொடராணை வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மேற்காணும் அரசாணையின்படி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களில் பணிபுரியும் 375 தற்காலிக பணியிடங்களில் 81 காலிப் பணியிடங்களை தவிர்த்து 294 நிரப்பப்பட்ட தற்காலிக பணியிடங்களுக்கு மட்டும் 01.01.2016 முதல் 31.12.2017 வரையிலான காலங்களுக்கு பணித்தொடராணை வழங்கப்பட்டது எனவும், ஜனவரி, 2018 முதல் ஜூலை 2018 வரையிலான மாதங்களுக்கு மேற்காணும் 294 பணியிடங்களுக்கு மாதந்தோறும் அரசிடமிருந்து சம்பள கொடு ஆணை பெறப்பட்டது எனவும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் மாவட்ட ஆட்சியரின் தேர்வுக் குழு மூலம் பின்வரும் 37 பணியிடங்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்:–

| | | |
|---|---|---|
| இளநிலை உதவியாளர் | – | 5 |
| தட்டச்சர் | – | 6 |
| சுருக்கெழுத்துத் தட்டச்சர் | – | 2 |
| இளநிலை மறுவாழ்வு அலுவலர் | – | 5 |
| தொழில்வழிகாட்டி அலுவலர் | – | 1 |
| முடநீக்கு பணியாளர் | – | 1 |
| கேட்டல் மற்றும் பேச்சுப் பயிற்சியாளர் | – | 1 |
| பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர் | – | 1 |
| செயல்திறன் உதவியாளர் | – | 1 |
| அலுவலக உதவியாளர் | – | 7 |
| இரவுக் காவலர் | – | 7 |
| **மொத்தம்** | – | **37** |

[த.பி.பா.]

3. மேற்படி 37 பணியிடங்கள், திட்டங்களை விரைவாக முழுமையாக செயல்படுத்திட வேண்டுமென்ற நோக்கத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மாற்றுப் பணி மூலம் மற்றும் சில பணியாளர்களை பணியிட மாறுதல் மூலமாக காலிப்பணியிடங்களில் பணி நியமனம் செய்ய நேரிட்டது. இனிவரும் காலங்களில் அரசிடமிருந்து அனுமதி பெறாமல் எந்தவொரு பணியிடமும் நிரப்பப்படமாட்டாது எனவும், தற்போது மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களில் உள்ள 81 காலிப்பணியிடங்களில் அரசின் அனுமதி பெறாமல் நிர்வாக காரணங்களுக்காக நிரப்பப்பட்ட 37 பணியிடங்களுக்கு பின்னேற்பாணை மற்றும் புத்தாக்க ஆணை (Revival Order) வழங்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களில் தற்போது காலியாக உள்ள 81 பணியிடங்களில் நிர்வாகக் காரணங்களுக்காக பணிநியமனம் செய்யப்பட்ட மேலே பத்தி–2ல் குறிப்பிட்டுள்ள 37 தற்காலிகப் பணியிடங்களுக்கு புத்தாக்கமும் (Revival) மற்றும் மேற்படி பணியிடங்களை அரசின் முன் அனுமதி பெறாமல் நிரப்பப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் செயலுக்கு பின்னேற்பும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல்சாரா குறிப்பு எண் 45463/நிதி(ச.ந)/2018, நாள் 30.08.2018 பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:**

நிதித் (ச.ந.)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்